
ராணி காமிக்ஸ
முகமூடி வீரர்
மாயாவி தோன்றும்
காட்டுப் பேய்
ரூ.4

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

- ★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
- ★ புராண படக்கதை
- ★ துப்பறியும் படக்கதை
- ★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- ★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
- ★ சிறுகதைகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

ரூ. 6 ஆயிரம் பரிசுபெற்ற மாணவ – மாணவிகள்

(மூன்றாவது பட்டியல்)

இந்த ஆண்டு தேர்வுகளில் வெற்றி பெற்று புதிய வகுப்புகளுக்குச் சென்ற மாணவ– மாணவிகள் புத்தகம், நோட்டு வாங்க உதவியாக *"ராணி காமிக்ஸ்" ரூ. 6 ஆயிரம் பரிசு வழங்குகிறது.*

இந்தப் பரிசு பெற, ஆயிரக்கணக்கான மாணவ – மாணவிகள் விண்ணப்பித்து இருந்தார்கள். ஜூன் 15–ந்தேதி வரை வந்த கூப்பன்களில் இருந்து 20 பேர் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு எங்கள் இனிய வாழ்த்துகள். ஆளுக்கு ரூ. 100 வீதம் பரிசு கொடுக்கப்படும்.

பரிசுபெற்ற அதிருஷ்டசாலி மாணவ – மாணவிகள் விவரம் வருமாறு:–

1. சு. பூங்கொடி, ரங்கசமுத்திரம்.
2. கலையரசி, கரூர்.
3. இர்ஷாதுல் அகமது, உப்பிலிபாளையம் (கோவை).
4. இரா. சரவணன், நெய்வேலி.
5. வைத்தியநாதன், திருவாரூர்.
6. சுல்தானா, குடியாத்தம்.
7. ஷேர்லி ஏஞ்சல், நாகர்கோவில்.
8. சே. இந்துமதி, திண்டிவனம்.
9. மகாலட்சுமி, செவ்வாய்ப்பேட்டை (சேலம்).
10. பாலமுருகன், வெள்ளோடு (திண்டுக்கல்).
11. ம. சூர்யா, உளுந்தூர்பேட்டை.
12. கார்த்திக், வடலூர்.
13. விக்ரமசோழன், திருவள்ளூர்.
14. நிர்மல் பிரீதம், திருச்சிராப்பள்ளி.
15. சரண்யா, பிலாவிடுதி (புதுக்கோட்டை).
16. பிரபாகரன், வாணிப்புத்தூர் (ஈரோடு).
17. சந்தியா, நுங்கம்பாக்கம் (சென்னை).
18. மு. முருகேசன், இராசாமடம் (தஞ்சை).
19. ப. கணேசன், கன்னியப்பபிள்ளைப்பட்டி (தேனி).
20. சையது அபுபக்கர், தேரழுந்தூர்.

மகராஜர்
காமராஜர்



வாசிக்க கல்விச் சாலை
வயிற்றுக்கு நல்ல சோறு!
தேசத்தின் வளத்தைக் கூட்ட
திக்கெட்டும் அணைகள்! ஆலை!
யோசிக்கும் நொடியில் இந்த
யுகம்வெல்லும் மனித நேயர்
மாசில்லை எனப்பார் போற்றும்
மகராஜர் காம ராஜர்!

வாய்ச்சொல்லில் வீரர் இல்லை!
வகுப்புகள் ஆறே கற்றார்
பாட்டாளி அவரின் பேரில்
பல்கலைக் கழகம் இன்று!
வீழ்ச்சியில் கிடந்த நாட்டை
மீட்பராய் வந்து காத்தார்!
நேயத்தின் எளிய செல்வர்
நிகரில்லாக் காம ராஜர்!

—அண்ணா கண்ணன், சென்னை.

ராணி காமிக்ஸ் – 434
(மாதம் இருமுறை இதழ்)

ஜூலை 16 – 31
2002

முகமூடிவீரர் **மாயாவி**
தோன்றும்
காட்டுப் பேய்


மாயாவி வாழும் காடு. ஒரு நாள் ஒரு வியாபாரி வந்தார்.
ஆ... வியாபாரி வந்து விட்டார்!
அப்போது, மாயாவி வந்தார்.
இனிமேல் எமிரா ஈட்டிகளை விற்கமாட்டேன்!
துணிமணி, பண்டம் பாத்திரம் விற்பனை செய்யுங்கள்!

எமிரா எப்படியிருக்கும் மாயாவி?
சொல்லுகிறேன்!

இதுதான் எமிரா. மக்கள் காட்டுவாசிகள்.
மன்னன் ஒருவன் இருந்தான்.
மன்னன் சர்வாதிகாரி.
இவனைத் தூக்கில் போடுங்கள்!
அவனை விரட்டுங்கள்!
அந்த சர்வாதிகாரியை ஆட்டி வைக்கும் ஒரு சக்தி இருந்தது!

அவன் ஒரு மந்திரவாதி. கழுகு போலப் பறப்பான்!
கடல் பாம்பு போல நீந்துவான்!
அவனைப் பார்த்து மக்கள் நடுங்கினார்கள்!
உங்கள் மீது குட்டி சாத்தானை ஏவிவிட்டு விடுவேன்!

ஒருவனுக்குக் காய்ச்சல்!
இவனைப் பேய் பிடித்திருக்கிறதே!
பேயே ஓடிப் போய்விடு! இல்லாவிட்டால், சாட்டையால் அடிப்பேன்!
சாட்டையால் அடித்தே அவனைக் கொன்றுவிட்டார்!
நானும் கேள்விப்பட்டேன்! பிறகு எப்படி பேயை விரட்டுவது?


திடீர் என்று ஒரு நாள் காட்டில்...
டாக்டர் ஆக்செல் மருத்துவமனை
??
அறுவை டாக்டர் ஆக்செல்லும், அவருடைய உதவியாளர்களும் காட்டில் இந்த மருத்துவமனையை அமைத்தார்கள்.
நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சையும் செய்தனர்.

டாக்டர் ஆக்செல் எப்படி காட்டுக்கு வந்தார்?
டாக்டர் ஆக்செல் மருத்
ஊருக்குள் போட்டி அதிகமாகி விட்டது... என் தொழில் படுத்துவிட்டது...
ஒருநாள் இரவு இரு காட்டுவாசிகள் வந்தார்கள்.
!
எழுந்திருங்க...

அவர்களின் அம்புகளில் நஞ்சு தடவப்பட்டிருந்தது.
வாங்க... வாங்க...

அவர்களுக்கு ஒரே ஒரு வார்த்தைதான் தெரிந்தது!
வாங்க...
வாங்க...

அவர்களுடன் நான் போனேன்!

என் கண்ணைக் கட்டி அழைத்துப்
போனார்கள்! காட்டுவழி...

அருவி விழும் ஓசை
கேட்டது!

ஒரு முகமூடி மனிதன் என்னை வரவேற்றார்.
வாருங்கள்,
டாக்டர் ஆக்செல்.
என்னை எதுக்கு அழைத்து
வந்தீர்கள்?


முகமூடி என்னை மண்டைஓட்டுக் குகைக்குள் அழைத்துப் போனார்.
உங்களை இரவில் தொல்லை பண்ணியதற்கு மன்னியுங்கள். ஒரு அவசரம்!


ஒரு அழகான பெண், பிரசவத்தில் துடித்துக்கொண்டிருந்தாள்.
இவள் என் மனைவி, டாக்டர்.
சுகப்பிரசவத்துக்கு உதவுங்கள்!

புதிய மாயாவி பிறந்தான்!
ஙீலஂ!
ஆண் குழந்தை!
எனக்கு வாரிசு!


ஆண் குழந்தை!
!
புதிய ச
புதிய தலைவர்!!


காட்டுக்கு வந்து, ஒரு மருத்துவமனை தொடங்குங்களேன்!
அப்போது நான் பதில் ஏதும் சொல்லவில்லை.

இங்கே ஒரு மந்திரவாதி இருந்துகொண்டு, நோயாளிகளுக்குப் பேய் ஓட்டிக் கொண்டிருக்கிறான்.
எனக்கும் ஆசைதான். மருத்துவமனை அமைக்கப் பணம் வேண்டுமே?

மாயாவி கருவூல அறைக்கு டாக்டரை அழைத்துப் போனார்.
உங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளுங்கள்!

டாக்டர் புறப்பட்டார்.
உங்களைப் பாதுகாப்பாக அழைத்துப் போவார்கள்!'
மருத்துவமனை தொடங்க இதை வைத்துக் கொள்ளுங்கள்!
வீடு திரும்பிய மருத்துவர் பொட்டலத்தைக் கொட்டிப் பார்த்தார்.
ஓ! அத்தனையும் மாணிக்கங்கள்!!

இவ்வாறாக காட்டில் மருத்துவமனை தோன்றியது.
முகமூடி பாதுகாப்பு அளித்தார்.
டாக்டர் ஆக்செல் மருத்துவமனை
டாக்டர் மருந்து கொடுத்து,, நோயாளிகளைக் குணப்படுத்தினார்.
ஆ... காட்டு
ஆ...
மந்திரவாதி இன்னும் பேய் ஓட்டிக் கொண்டிருந்தான்.
பேயே!
ஓடிப்போ!!

சாட்டையால் அடித்தான்!
பேயே... ஓடு... ஓடு...
ஆ! அய்யோ...
போதும்! போதும்!!
நான் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகிறேன்!
என்னை மீறிப் போய் விடுவாயா?
மந்திரக்கோலால் அடித்தான்!

மந்திரவாதி, மன்னனிடம் வந்தான்.
ஒரு வெள்ளைப் பேய் வந்திருக்கிறது! அங்கே யாரும் போகக் கூடாது என்று சொல்!
அங்கே போனால் உடனே நோய் குணமாகிறதாமே!
நான் சொன்னதைச் செய்! இல்லாவிட்டால், உன்னை எரித்து சாம்பல் ஆக்கிவிடுவேன்!
அப்படியெல்லாம் செய்து விடாதே!
மந்திரவாதியே பறையறைந்தான்.
யாரும் ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடாது!


போனால், இந்த ஊரையே
பேய் பிடித்துக்கொள்ளும்!

மாயாவி காதுக்கு செய்தி எட்டியது.
ஓ... டாக்டர் ஆக்செல்லுக்கு ஆபத்து!


பேய்க்குப் பயந்து ஊர் மக்கள் வெளியேறினார்கள்!

விரட்டு!
டாக்டரை ஊரைவிட்டே விரட்ட வேண்டும்!
விரட்டு!
விரட்டு!
போகாவிட்டால் கொல்லு! கொல்லு!!
உம்...

டாக்டர்! மந்திரவாதி உங்களை எதிர்த்து ஆட்களைத் திரட்டுகிறான்!
வரட்டும்! அவர்களுடன் நான் பேசுகிறேன்!
டாக்டர் ஆக்செல் ஆஸ்பத்திரி.
அவர்களிடம் பேசிப் பயனில்லை!
ஒரு நோயாளியைப் பார்க்க நான் போக வேண்டும்!
டாக்டர் காரில் புறப்பட்டார்!
எனக்கு நோயாளி தான் முக்கியம்!


டாக்டரை நோக்கி ஒருவன் அம்பு எய்தான்!
!?

அவர் நெஞ்சில் அம்பு பாய்ந்தது!
ஆ....!

ஓ! மந்திரவாதியின் ஆட்கள்!

டாக்டர் மருத்துவமனைக்குத் திரும்பினார்.
ஆ... டாக்டர்...
அம்பு ஆழமாகப் பதியவில்லை. உடனே ஆபரேசன் செய்ய வேண்டும்!
டாக்டர் மீது அம்பு பாய்ந்துவிட்டது! செய்தி பரவியது..
!
மாயாவி உடனே மருத்துவமனைக்கு வந்தார்.
இரண்டு பேர் ஓடுவதைப் பார்த்தேன்!
இனி வெளியே எங்கும் போகாதீர்கள்!

அடுத்த நாள்...
அப்பா ! எங்கே போகிறீர்கள் ?
ஆஸ்பத்திரிக்கு.

உங்களுக்குக் காவல் ஏற்பாடு செய்திருக்கிறேன். பயமில்லாமல் உங்கள் வேலையைப் பாருங்கள் !

காவலாளி! வெகு நேரம் நிற்கமாட்டான்! காட்டுக்குள் போய்விடுவான்!!


இரண்டு நாள் சென்றது. குழந்தைகள் வந்தார்கள்.
நாம் வேட்டைக்குப் போகலாமா?
நீங்கள் போங்கள்!

இரு குழந்தைகளும் புறப்பட்டார்கள்.
கொஞ்சம் நில். ஏதோ சத்தம் கேட்கிறது!
விடு!
சொய்ங்...!
மாயாவி! என்ன இங்கேயே தங்கி விட்டீர்கள்?
நான் காவலுக்கு இருக்க வேண்டியிருக்கிறது!

ஒருநாள் காட்டு இலாகா வீரர்கள் வந்தார்கள்.
டாக்டர் ஆக்செல் மருத்துவ்மனை
துப்பாக்கியால் சுடுங்கள். துப்பாக்கி வேண்டுமா?
நான் கொல்லுகிறவன் அல்ல! உயிரைக் காப்பாற்றுகிறவன்!
காவலாளிக்கு துப்பாக்கி சுட கற்றுத்தந்தார்கள்
அப்படித்தான்!
டுமீல்....

இங்கே துப்பாக்கி வேண்டாம். உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமே தவிர கொல்லக்கூடாது!
தற்காப்புக்கு இது தேவைப்படும், டாக்டர்!
ஒருநாள்...
குரானா! அப்பா எங்கே?
டாக்டருக்குப் பாதுகாப்பாக இருக்கிறார்.
சபாவுடன் உலா போகலாமா?

எனக்கு வேலை இருக்கிறது. நாளை போவோம்!

குழந்தைகள் கிளம்பிவிட்டார்கள்.
நாங்கள் போறோம்!
கொஞ்ச தூரந்தான்!

லோசி! இங்கே
வேட்டையாடலாமா?
வேண்டாம், கிட.
ரொம்ப தூரம்
வந்துவிட்டோம்.
வீட்டுக்குத்
திரும்புவோம்.

அப்போது சபா உறுமியது!
கொர்...ர்...ர்...ர்...

கழுதைப் புலிகள்!

!
கழுதைப் புலிகள்... கூட்டமாக வருகின்றன!


கழுதைப்புலிக் கூட்டம் சிங்கத்தைக் கூடக் கொன்றுவிடும்!

என்ன செய்வது கிட்?
மரத்தில் ஏறிக் கொள்ளுவோம்!


இருவரும் மரத்தில் ஏறினார்கள்
இன்னும் மேலே போ!

கழுதைப் புலிகள் சபாவைச் சூழ்ந்துகொண்டன!

கழுதைப் புலிகள் சபாவைத் தாக்கின!
குழந்தைகள் மரத்திலிருந்து இறங்கும் வரை கழுதைப் புலிகள் காத்திருந்தன!
கிட்! என்ன செய்வது?
அப்பா வரும்வரை காத்திருப்போம்!


சிங்கங்கள் மரம் ஏறக்கூடியவை.
சபா ! மேலே வா !!


கழுதைப் புலிகள் சுற்றிச் சுற்றி வந்தன !

மாவிட்டானில்
குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள்?
குழந்தைகளைப் பேசச் சொல்!
குழந்தைகள் வெளியே யிருக்கிறார்கள். கூப்பிடுகிறேன், டயானா!
எங்கே போனார்கள்! மழை வேறு பெய்கிறது...


குரானா குழந்தைகளைத் தேடிப் போனான்.
திரும்பி வந்தான்.
சபாவுடன் வெளியே போயிருக்கிறார்கள்.
தனியாகவா? ஆபத்து ஆச்சே! தேடிப் பிடியுங்கள்!

குழந்தைகளைத் தேடிக் கிளம்பினார்கள்.
எங்கிருந்தாலும் தேடிப் பிடிக்க வேண்டும்!

இருட்டிவிட்டது. மழை வேறு.
குழந்தைகளைக் காணோமே!
குழந்தைகள் போன கால் தடத்தைக்கூட மழை அழித்து விட்டதே!
குழந்தைகள் மரத்தின் மீது இருந்தார்கள்.
அப்பா இன்னும் வரவில்லையே?
கட்டாயம் வருவார்!

கிண்...
??
மண்டைஓட்டுக் குகையில் போன் அலறியது. ஆனால், எடுக்க ஆள் இல்லை! டயானா போன் செய்தாள்.
குழந்தைகளைக் காணோம! தேடிப்போன குரானாவையும் காணோம்!
?!

மருத்துவமனைக்குக் காவலாக இருந்த மாயாவி உடனே கிளம்பினார்!
குழந்தைகள் காட்டுக்குள் வழி தவறிப் போயிருப்பார்களோ?


பொழுது இருட்டத்
தொடங்கியது

சபா, கழுதைப் புலிகளைத்
தாக்கியது!
கொர்...ர்...ர்...

அங்கே ஏதோ சத்தம்
கேட்கிறதே?


சபா, கழுதைப் புலிகளை அடித்து வீழ்த்தியது!
கொர்...
ஈ...ஈ...ஈ....

காட்டுவாசிகள் பார்த்து விட்டார்கள்!

மாயாவியும் விரைந்து வந்தார்.
டுமீல்... டுமீல்...


துப்பாக்கி சத்தம் கேட்டு, கழுதைப் புலிகள் ஓட்டம் பிடித்தன!
டுமீல்... டுமீல்...

மாயாவி குழந்தைகளைக் காப்பாற்றினார்.
உ... உ...

தனியாகக் காட்டுக்குள் வரக் கூடாது!

ஹீரோ முன் செல்ல, எல்லோரும் பின் தொடர்ந்தார்கள்!
மெதுவாகப் போ ஹீரோ!


குழந்தைகள் ஒன்றாகத் தூங்கிவிட்டார்கள்.
பசி... பயம்... களைப்பு...

டயானாவுக்குச் சொல்ல வேண்டுமே?

குழந்தைகள் வந்து விட்டார்கள். நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்.
மகிழ்ச்சி! நீங்கள் போய்த்தான் அழைத்து வந்தீர்களா? நன்றி!

சபா! நீதான் குழந்தைகளைக் காப்பாற்றினாய்!
உர்...
என்னிடம் கூட சொல்லா மல் போய விட்டார்கள்!
இனி- கவனமா பார்த்துக் கொள்!
மாயாவி குழந்தைகளை மூடிவிட்டார்.
லொக்... லொக்....


கோழி சூப் குடியுங்கள்! இருமல் நிற்கும்!
கழுதைப்புலி எங்களை வளைத்துக்கொண்டது!
நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்தோம், அப்பா!

மரத்தின் மீது ஏறிக்கொண்டோம்.
ஓரே மழை!

அதுதான் சளி பிடித்துக் கொண்டது!

இப்போது சரியாகி விட்டது... லொக்... லொக்...
சளி இருக்கிறது. மருத்துவரைப் பார்ப்பது நல்லது.
மருத்துவமனைக்குப் புறப்பட்டார்கள்.
அவர் மிகவும் நல்ல டாக்டர்!
நானும் வருகிறேன், அப்பா!
ஜீப்பில் போனார்கள்!


அதே நேரம்... மருத்துவமனைக்குப் போகிறவர்களை மந்திரவாதி பார்த்துக்கொண்டிருந்தான்!
இவர்களைச் சும்மா விடக் கூடாது!
டாக்டர் ஆக்செல் மருத்துவமனை


அப்போது மாயாவி வந்தார்.
மந்திரவாதிக்கு உடனே தெரிவிக்க வேண்டும்!

மாயாவி மருத்துவமனைக்குள் சென்றான்.
என் மகன்... மழையில் நனைந்து சரியான சளி. காய்ச்சலும் இருக்கிறது!
டாக்டர் ஆக்செல்லைக் கூப்பிடு!
டாக்டர் ஆக்செல் குழந்தையைச் சோதித்துப் பார்த்தார்.
எப்படியிருக்கிறது டாக்டர்?
பயப்படுவதற்கு இல்லை. ஆனாலும்...

டயானாவைப் பேசச் சொல்லுங்கள் !
டயானா ! உனக்கு போன் !
டயானா ! ஆஸ்பத்திரியிலிருந்து பேசுகிறேன். கிட்டுக்கு விஷக் காய்ச்சல் என்று டாக்டர் சொல்லுகிறார்.

டாக்டர்! பயப்படும்படி எதுவும் இல்லையே?
சரியான நேரத்தில் குழந்தையை இங்கே, கொண்டு வந்துவிட்டீர்கள்.

அப்பா! நான் செத்துப் போவேனா?
சே...சே! நாளை வீட்டுக்குப் போய்விடலாம்!


டயானா ஒரு ஹெலிகாப்டரில் விரைந்து வந்தாள்.
ஒரு மருத்துவமனை தெரிகிறதா, பாருங்கள்


அதோ பார், அம்மா, வர்றாங்க!
JUNGLE PATROL


டயானா கீழே இறங்கினாள்.
அம்மா...
லோசி...!
PATROL

டயானா உள்ளே வந்து, மகனைப் பார்த்தாள்.
அம்மா....
அன்பே கிட்!
அம்மா! டாக்டர் மருந்து ஒரே கசப்பு. லொக்... லொக்....
பேசாதே! கசப்பு மருந்துதான் காய்ச்சலை சீக்கிரம் குணப்படுத்தும்!
மருத்துவமனைக்கு வெளியில்...
இன்று இரவு குழந்தையை...
ஆஸ்பத்திரியையே கொளுத்திவிடுவோம்!

குழந்தையின் உடல்நிலை சீராக இருக்கிறது. இரண்டு நாளில் வீட்டுக்குப் போய்விடலாம்!
நன்றி, டாக்டர்!
நன்றி!


கழுதைப் புலிகளைப் பற்றி அம்மாவிடம் சொல்லாதே! பயந்துவிடுவார்கள்!
சரி!

இன்று இரவு ஆஸ்பத்திரியை சாம்பல் ஆக்கிவிட வேண்டும்!
அதுதான் முடியாது!

ஏன் முடியாது?
உள்ளே மாயாவி இருக்கிறார்!

அவனையும் சேர்த்துக்
கொளுத்துவோம்!
அவனும் சாகட்டும்!

மாயாவிக்கு சாவு
கிடையாது, தெரியுமா!

அன்று இரவு... ' தீப்பந்தத்துடன் மந்திரவாதி வந்தான்!

நாய் பார்த்துவிட்டது!

ஒரே பாய்ச்சல்!


மந்திரவாதி ஒரு பொடியைத் தூவினான்!
நாய் மயங்கி விழுந்தது!
அதேநேரம்...
டுமீல்...!
டுமீல்...!!

வா !
உன்னைத்தான் எதிர்பார்த்தேன் !
இந்தா, வாங்கிக் கொள் !
அய்யோ...!
இவன் மனிதன் அல்ல ! பேய் ! பிடியுங்கள் ! அடியுங்கள் !!

காட்டுமிராண்டிகள் பிடிக்க வந்தார்கள்.
டுமீல்... டுமீல்...

காட்டுவாசிகள் சிதறி ஓடினார்கள்!
பேய்... பேய்...


நீ மந்திரவாதி அல்ல! பித்தலாட்டக்காரன்! பேய் பிசாசு என்று மக்களை ஏமாற்றுகிறவன்!

ஏ மோகினிப் பேய்! அவன் கழுத்தைக் கடி! இரத்தத்தைக் குடி!!
ஒரு பெண் ஓடிவந்தாள்!
அரண்டவன் கண்ணுக்குத்தான் இருண்டதெல்லாம் பேய்! என்னிடம் எதுவும் நடக்காது!!


மரியாதையாக இந்தக் காட்டை விட்டு ஓடிவிடு! இல்லையென்றால், என் துப்பாக்கி பேசும்!
மந்திரவாதி வெளியேறினான்!
மந்திர தந்திரத்தால் நோய் தீராது! உடல்நலம் இல்லாவிட்டால், இனி ஆஸ்பத்திரிக்குப் போங்கள்!

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

அடுத்த காமிக்ஸ்

பறக்கும் மனிதன்

ஜடாயு தோன்றும்

அணுகுண்டு திருடன்

அதிரடிப் படக்கதை

ஆகஸ்டு 1-ந்தேதி

மறக்காமல் வாங்குங்கள்...

"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

Regd. with the Registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971–8567

July 16, 2002.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)